Registered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு தை மீ உகஉ ( 1947 பெப்ரவரி 11 செவ்வாய்க்கிழமை ) [இல. சு

## இயற்கையில் இறைவன்

[திருமதி க. ர. ஆதிலக்ஷ்மி அம்மையார்]

(முற்றொடர்)

அப்பர் பெருமானைச் சமணர்கள் நீற்றறையி லிட்டபோது, இறைவனது திருவடி நீழற்பெருமை இயற்கை வளங்களாகவே அவர் மனசகண்முன் காட்சி யளிக்கின்றன. மாசற்ற வீணையின் ஒலியும், மாலைத் தண்மதியின் நிலவும், தென்றற் காற்றின் இன்பநிலையும், (இளவேனிற் காற்று) வண்டுகள் ஒலிக்கின்ற பொய்கையும் இறைவனது பெருமை தங்கிய இணைபடிகளுக்கு ஒப்பாகின்றன.

"மாசில் வீணையும்,
மாலைமதியமும்
வீசு தென்றலும்,
வீங்கிளவே னிலும்,
மூசு வண்டறைப்
பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நீழலே"
என்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெண்மையின் தன்மைகள் முழுமையும் வாய்க்கப்பெற்ற பரவையாரைக் கண்டதும், "கற்பகத்தின் பூங்கொம்போ!" என்று தொடங்கிச் "சிவனருளோ" என்று அவ்வம்மையின் வனப்பில் ஈடுபடுகின்றார். கைபுனைந் தியற்றாக் கவின்பெரு வனப்பைக் கண்டபோ தெல்லாம் மெய்யுணர்வு பெற்ற பெரியோர்கள் இறையுணர்வையே அவற்றுடன் பிணைத்து இன்பந் துய்த்தனர்.

மணிவாசகப் பெருமான் ஒரு பொய்கையைக் காண்கின்றார். அதில் குவளைப் பூக்களும், செந்தாமரைகளும் நிரம்பி யுள்ளன. பலர் வந்து அப்பொய்கையில் மூழ்கி நீராடுகின்றனர். நாரைகளும் பாம்புகளும் பொய்கையின் மேற்புறமும் உட்புறமும் மிளிர்கின்றன. இக் காட்சியை அவர் உமாதேவியாரோடு இறைவன் அங்குத் தோன்றும் காட்சியாகக் கண்டு பாடுகின்றார்:

"பைங்கு வளைக்கார் மலரால்,
செங்கமலப் பைம்போதால்,
அங்கங் குருகினத்தால், பின்னும்
அரவத்தால்,
தங்கள் மலங்கழுவுவார்
வந்துசார் தலினால்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும்
போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து...."

புராணகாவியங்களியற்றும் ஆசிரியர்களும் நாட்டு வளப்பங் கூறுமிடத்து இயற்கை எழிலைப் பலவாறு புகழ்வது கண்கூடு. சேக்கிழார் பெருமான், கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவர் முதலியோரது காவியங்களில் இவ்வியற்கை வருணனைகளைப் பரக்கக் காணலாம்.

மேலும் இயற்கையோ டியைந்த வாழ்க்கையிற்றான், மக்களும் தூய இன்பம்பெறுவர்; மன அமைதியும் அடைவர். இதனாலேயே முற்றுந் துறந்த முனிவர் கிட்டை கூடுதற்கு மலைகளையுங் காடுகளையும் நாடினர். இத்தகைய தூய்மையான இயற்கை வாழ்வினைப் பலர் வெறுக்கின்றனர். மண்ணை வெறுப்பதும், பெண்ணை வெறுப்பதும் இன்பந்தரும் வழிகள் என்பர்; புலன்க ளெல்லாம் புறக் காட்சிகளைக் கண்டு திளைத்தல் துறவறமன்று என்பர். உண்மைத் தவத்தை உலகிற்கீய்ந்த வள்ளுவர் மொழியை இவர் மறந்தனர்போலும்!

"உற்றநோய் நோன்றல்
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

இஃதே யன்றோ உண்மைத் தவம்?

நாளுக்குநாள் மக்களுக்குச் செயற்கைப் பொருள்களிலேயே கருத்து நுழைகின்றது: தேவைகளை அதிகரித்துக்கொண்டு போகின்றனர்; அதனால் இடர்ப்படுகின்றனர். நாளுக்கு நாள் இத்தேவைகளை விருத்தி செய்வதிலும் அடைவதிலும் செலவிடும் ஊக்கம் முதலியவற்றால் மனஅமைதி குன்றி, பலவித உடற்கோளாறுகளுக்கும் நோய்ப்பிணிக்கும் இரையாகின்றனர். தெய்வ நம்பிக்கையும் குறைகின்றது.

இதையறிந்து வருந்திய தென்னாட்டுத் தமிழ்ப் பெரியார் ஒருவர் சுமார் 20 ஆண்டுகட்கு முன்னர் தம்முடன் உறைவோர்க்கு உபதேசித்த உண்மைகள் சில இங்கே குறிக்கத்தக்கன. இப்பெரியார், காரணப் பொருளாகிய இறைவனது தன்மைகள் உலகில் காரிய வகையில் இயற்கையாய் விளங்குகின்றன என்பதை உணர்ந்து "இயற்கை வாழ்வே இன்பமளிப்பது" என்று அதையே ஒரு சட்டமாக வகுத்து, அநுஷ்டிக்குக் கொண்டுவரும் அடியவர் அதிலிருந்து தவறுதல் கூடாதென்றும், தவறினால் தண்டனை பெறுவர் என்றும், பிழையை உணர்ந்தால் உடனே தண்டனை நீங்குமென்றும் மிக எளிதில் காட்டியுள்ளார். அவரே இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்னும் திருநாமமுடையார்.

அத்தகைய இயற்கைச் சட்டமாவது:—

1 தண்ணீரில் விடியல் நீராடுதல். (வெந்நீரே உதவாது;)

2 ஒரு தெய்வ நம்பிக்கை.

3 அத்தெய்வத்திடமும் பிரார்த்தனை வேண்டுகைளையும் செய்யாமை.

4 எந்நோய் வரினும் அந்நோய்க்கு மருந்துண்ணல் முதலிய செயற்கைச் சிகிச்சை முறைகளை நீக்கி நீறு பூசுதல் தெய்வ நம்பிக்கை முதலிய இயற்கையான சிகிச்சை முறையையே கைக்கொள்ளுதல் (இது தெய்வ நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கின்றது.)

5 எவ்வுயிர்க்கும் மனத்தாலும் தீங்கிழையாமை.

6 வெள்ளி விரதம் (வெள்ளிக்கிழமை, இந்து முகம்மதியராகிய அனைவர்க்கும் உகந்ததோர் உபவாசநாள் என்பது இங்கே குறிக்கத் தக்கது, உபவாசம் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## வாக்குரிமை இல்லை

### டெடிகமத்தில் இந்தியர் அவதி

டெடிகமப்பகுதியிலே உடாகொடை என்னும்தோட்டம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது. இத் தோட்டத்திலேயுள்ள தொழிலாளரில் 800 பேர் இந்தியர்.

டெடிகமத் தொகுதிக்கு, பாராளுமன்றத்து அபேட்சகராக, மிஸ்ரர் செனநாயக்காவின் மகன் மிஸ்ரர் டட்லி செனநாயக்கா முன்வருவார். அவர் இப்போதும், அத்தொகுதியின் பிரதிநிதியாக அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிக்கிறார்.

சென்றவாரம் கேகாலையின் அரசாங்கத் தலைவரான ஸ்ரீ. கே. கனகசுந்தரம் அவர்கள் ஷை தோட்டத்துக்கு வாக்காளரைப் பதிவுசெய்யும் விஷயமாகச் சென்றார். அவருடன் மிஸ்ரர் டட்லி செனநாயக்காவின் பிரதிநிதியாக மிஸ்ரர் வீ. விக்கிரமசிங்ஹ என்பவரும் சென்றார்.

குறித்த தோட்டத்திலேயுள்ள 800 தொழிலாளரையும் வாக்காளராகப் பதிவு செய்வதை மிஸ்ரர் விக்கிரமசிங்ஹ ஆட்சேபித்தார். ஸ்ரீ கனகசுந்தரம் இவ்விஷயமாக விசாரணை செய்துவிட்டு, அவர் ஆட்சேபனைப் படிக்கு, அவ்வளவு பேரையும் வாக்காளராகப் பதிவு செய்யாது மீண்டுவிட்டார்.

## உலக சமாதானம்!

### கூடிய சீக்கிரத்தில் மகாநாடு

உலகத்திலே, ஓர் தலைமுறைகாலத்திலே 2 கொடிய யுத்தங்கள் மூண்டு, வருஷக்கணக்கில் அவை நிகழ்ந்து கோடிக்கணக்கான மக்களை நமனுலகுக்கு அனுப்பிவிட்டன. இப்படியான அனர்த்தங்கள் இனியும் நிகழாமல் இருக்கச்செய்ய முடியுமா? இக்கேள்விபற்றி மகாத்மாகாந்தியடிகளும், இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா என்னும் நாடுகளில் வதியும் அவருடைய பல நண்பர்களும் ஆராய்ந்து வருகிறார்கள் என்று யுனைற்றெட்பிரஸ் செய்திஸ்தாபனம் கூறுகிறது.

இவ்விஷயமாகக் கூடியசீக்கிரத்தில் இந்தியாவிலேயே ஓர் உலக சமாதானமகாநாடு நிகழும் என்றும், அதற்கான அழைப்புப் பத்திரங்களை மகாத்மாகாந்தியே உலகப் பிரமுகர்க்கு விடுப்பர் என்றும் தெரிகிறது. இந்த மகாநாடு ஓர்வாரம்வரை நிகழும். அக்காலத்தில், உலகசமாதானம் கருதிப் பிரார்த்தனைகளும், இவ்விஷயமான சம்பாஷணைகளும் நிகழும்.

குறித்த சமாதான மகாநாடு சிவக்கிராமத்தில் அல்லது சாந்தி நிகேதனத்தில் நிகழக்கூடும்.

## லஞ்சம் ஒழிய!

### இந்தியச் சட்டசபையில் மசோதா

அரசாங்க உத்தியோகத்தர்க்கிடையே லஞ்சம் பெறுதல் முதலாம் கூடா வழக்கங்களை ஒழிக்க ஓர் மசோதாவை, இந்திய இடைக்கால அரசாங்கத்தில் உள்நாட்டு மந்திரியான சர்தார் வல்லபாய் படேல் சென்றவாரம், இந்தியச் சட்டசபையில் எடுத்தாண்டு நிறைவேற்றினார். இம் மசோதாவை எடுத்தாளும்போது அவர் பின்வருமாறுகூறினார்:

"இன்று இந்த நாட்டிலே உத்தியோகத்தராயுள்ளவர் லஞ்சம் பெறுதல் மிகப் பாரதூரமான நிலைமைக்கு வந்துவிட்டது, இவ்விஷயத்தில் ஆராய்ச்சிசெய்து இத்திய வழக்கங்களை அநுட்டிக்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, இதற்கென ஓர் விசேஷ பொலிஸ்தாபனத்தை நாம் நிறுவினோம். அவர்கள் செய்த விசாரணையின் பயனாக 1,100 உத்தியோகத்தர் மீது வழக்குத் தொடரப்பட்டது 700 உயர்தர உத்தியோகத்தரும் வேலைக்காரரும் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த உத்தியோகத்தரில் 46 பேர் மிகவும் உயர்தர அதிகாரிகளாவர்.

'5 கோடியே 65 லட்சம்ரூபாவை இந்த உத்தியோகத்தர்கள் லஞ்சமாகவும் வேறுவிதமாகவும் பெற்றுள்ளனர் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

"இப்படியான சிருத்திரங்கள் யுத்தம் முடிந்து இவ்வளவு காலமாயும் நின்றபாடில்லை. கட்டுப்பாடுகளும், லைசென்ஸ் முறைகளும் இன்னும் அமுலில் இருக்கின்றன. இவை இருக்கும்வரை, உத்தியோகத்தர்கள் லஞ்சம் முதலியன பெறுதற்கான வசதிகள் நிச்சயமாக இருக்கும். இதனைத் தடுக்கவே இச்சட்டம்இயற்றப்படுகிறது."

இத்தீர்மானத்தைப்பற்றிப்பலர்பேசினார்கள். யுத்தகாலத்தில் பல உத்தியோகத்தர்கள் குபேர சம்பத்துப் படைத்துவிட்டார்கள். இவர்கள் லஞ்சம் பெற்றோ, வேறு தூர்வழியினாலோ இப்பெருஞ் செல்வத்தைச் சம்பாதித்திருக்கவேண்டும். எனவே, அப்படி அவர்கள் சம்பாதித்த செல்வம் அனைத்தையும் அரசாங்கம் பறிமுதலாக்க வேண்டும் என்றும் சில அங்கத்தவர்கள்ஆலோசனைகூறினர்.

### பலஸ்தீனம் துண்டாடப்படுமா?

பலஸ்தீனத்தில் யூதர் செய்துவரும் அக்கிரமங்களைச் சமாளிப்பதற்காக அங்கு வசித்துவந்த பிரிட்டிஷ் பிரஜைகளை வெளியேற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இன்னும் பலஸ்தீனத்தை மூன்று பிரிவுகளாகத் துண்டாக்கி, ஓர் பாகத்தில் பிரிட்டிஷாரும்; ஓர் பாகத்தில் யூதரும், ஓர்பாகத்தில் அராபியரும் பரிபாலிக்க ஒழுங்குகள்செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் பிரயத்தனம் செய்கின்றது. ஓரளவுக்கு யூதர் இந்த ஒழுங்குக்கு இணங்கினாலும், அராபியர் இணங்கமாட்டார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய வருஷ
தை மீ உகூ செவ்வாய்க்கிழமை


## சமயநூற் கல்வி

I

எச்சமய மக்களுக்கும் அவர்கள் அநுசரித்தொழுகும் அச்சமயநூற் கல்வி இன்றியமையாததாகும்; இல்லையேல் மக்கள் தாம் தாம் கைக்கொண்டொழுகும் சமயவழி நின்று கடன் ஆற்றி இம்மை மறுமைப் பயன்களை அடைதல் முடியாதாம். சமயநூற் கல்வியறிவில்லாதவர், தாம் வழிபடும் இறைவனை, கண்ணப்பநாயனுர் முன் செய்தவாறு தமக்கு விட்டகுறை தொட்டகுறை காரணமாக வந்த சிறந்த பத்திமார்க்க வாயிலாக அறிதலும் வணங்குதலும் அடைதலும் முடியுமேயொழிய வேறு எவ்வாற்றானும் முடியாததாகும். ஆனல்அப்படியான விட்டகுறை தொட்டகுறை கண்ணப்ப நாயனரிடத் திருந்தவாறு இவனிடத்திலும் உண்டென்பதை இவனுக, பிறர் எவராக அறிதலும் சொல்லுதலும் முடியாது; ஆதலினலே ஆன்மார்த்தமாக ஈடேற விரும்புபவன் தன் சமயத்து மூதாதையர் அநுட்டித்துவந்த மேலான முறைகளையுஞ் செயல்களையும், அவர்களைப் பின்பற்றித் தானும் அநுட்டித்துவரின் ஒருவாறு தவறின்றித் தன்மார்க்கத்தில் ஒழுகுதல் முடியும்; இது "நீறிட்டாரைப் பார்த்து நானும் நீறிட்டு வருகின்றேன்"என்றுசிறுத்தொண்டநாயனுர் காலபைரவமூர்த்திக்குத் தம்மைச் சிறுப்பித்துச் சொல்லிய முறையில், பெரியார் செய்வதைப் பார்த்துச் சிறியார் தாமுஞ் செய்யும் முறையேயாகும்; இதுவே திடநம்பிக்கை காரணமாக வந்து கைகூடிய பத்திமார்க்கமாகுமென்பர் பெரியோர். குருவிள் உபதேசம் பெற்ற பயனுக, சீடன் கடவுள்பாற் கொள்ளும் அன்பு முதிர்ச்சியினல் மாத்திரம் கைகூடும் பத்தி மார்க்கமும் இவ்வாறேயெனலாம்; இதனை "மூடபத்தி" யென்று சொல்லும் அவர்கள் மூடரேயொழிய இப்பத்தி மூடப்பத்தியாகமாட்டாது; காரணமென்னையெனில் இப்பத்திமார்க்கத்தில் ஒருவன் ஒழுகும்போது இறைவனுடைய திருவருள் அவனிடத்து விரைவில் வந்து கூடும் என்பதே.

மேலே சொல்லப்பட்ட பத்திமார்க்கம் பூர்வ புண்ணியத்தின் பயனுக, ஆயிரம்பதினுயிரத்திலொருவனுக்குச் சித்திக்குமெனச் சொல்லலாமேயொழிய எல்லார்க்கும் நினைத்தமாத்திரத்தே சித்தித்தல் முடியாத கருமமென்று பெரியோர் சொல்வர்; ஆனதாற் பெரியோர் சொற்படியும் குரு உபதேசித்தபடியும் ஒருவன் ஒழுகிக்கொண்டு, சமயநூல்களையுந் தன்பக்குவத்திற்கேற்றபடி வரன்முறையே கற்கத் தொடங்குதல் வேண்டும்.

மற்றைச்சமயத்தவர்கொள்கை எங்ஙனமாயினும், சைவமக்களாகிய எங்கள் பெரியார் கொள்கை இதுவேயாகும்; இச் சமயக்கல்வியும் இளம்பிராயந்தொட்டு இயல்புக்கேற்றவாறு சமயநூலுணர்ச்சியும். தெய்வ நம்பிக்கையும் சமய ஒழுக்கமும் பூண்ட ஆசிரியரிடத்திலேயே பெறற்பாலதாகும்;பொருளீட்டுதற்கு ஏதுவாகவுள்ள உலகக் கல்வியையே இக்காலத்தில்மக்கள் இன்றியமையாதுகற்கவேண்டியிருத்தலினல் இக்கல்வியை யறவே அலட்சியஞ் செய்து, சமயநூற் கல்வியைமாத்திரம் தக்க ஆசிரியரிடத்திற் பயின்றுகொள்ளுதல் இக்காலத்தில் இயலாதாகும். எனவே, உலகக் கல்வியும் சமயக் கல்வியும் தோளோடு தோளுறச் செல்லவேண்டியிருக்கின்றன. இதனுல் உலகக் கல்வியை மிக்க ஆர்வத்தோடு கற்பித்தும் கற்றும் வரும் இக்காலத்திலே, வித்தியாசாலைகளிற்றனே மாணவர்கட்குச் சமயக்கல்வியும் கற்பிக்கவேண்டுமென்ற நியதி ஏற்படலாயிற்று.

இந்த நியதியின்படி இலங்கையிலுள்ள ஏனைய சமயத்தவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தங்கள் மதச்சார்பினரா லமைக்கப்பட்ட கலாசாலைகளில் தத்தம் சமயக் கல்வியைப் புகட்டி வருதற்கான ஒழுங்குகளை இயன்றவரையில்அமைத்துள்ளார்கள்; இங்கே ஏனைய சமயத்தவர்களென்றது சைவசமயத்தினரல்லாத பௌத்த கிறீஸ்துவ இஸ்லாமிய சமயங்களை யனுசரிப்பவர்களையாகும். சொல்லப்பட்ட மூன்று சமயவாதிகளுள் பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் இக்காலத்தில் தங்கள் தங்கள் வித்தியாசாலைகளில் தத்தம் சமயநூல்களைத் தங்கள் சமயப் பிள்ளைகட்கு ஊட்டுவதற்காகியஒழுங்குகளைச் செய்துவருகின்றுர்கள். கிறீஸ்தவர்கள் இக்காலத்தில் மாத்திரமன்று,அக்காலந்தொட்டுத் தங்கள் சமயக் கோட்பாட்டினைத் தம்சமயப் பிள்ளைகட்கும், அவ்வளவோடு அமையாது இங்குள்ள ஏனைய சமயப் பிள்ளைகட்கும் புகட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறுர்கள்; கிறீஸ்தவ மிஷனரிமார் இங்குள்ள இஸ்லாமிய மதத்தினர்க்குத் தம் சமயத்தையூட்டி அவர்களைக் கிறீஸ்த மதத்திற்கு இழுக்கும் முயற்சியில் அநுகூலம்பெற்றிலரெனல் தவறுகாது; காரணம் இஸ்லாமியர் அதிக சமயாபிமானங் கொண்டமையே; அங்ஙனமாயின், கிறிஸ்துவ மிஷனரிமார் இங்குள்ள எவ்வெச் சமயப் பிள்ளைகளைத் தம்மதத்திற்கு இழுக்கின்றனரென்று கேட்டால், பௌத்தபிள்ளைகளையும் சைவப் பிள்ளைகளையுமென்பது தானே விடையாகும்; இதற்குக் காரணம் இந்த இருசமய வாதிகளிடத்தும் காலந்தோறும் சமயாபிமானங் குன்றத் தலைப்பட்டமையேயாகும்.

ஆனல் சைவசமய மக்கள் விஷயத்தில் முந்தியே குன்றியிருந்த சமயாபிமானம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் செய்த அரும்பெரும் முயற்சியினல் ஒருவாறு வளரத் தொடங்கியது; அந்த வளர்ச்சி எங்கள் நாவலர் காலத்தின் பின்னரும் இற்றைவரையில் நின்று நிலவுகின்றதெனலாம்.

# உலகிற்குக் கதி எது?

## 'வேதாந்தம்தான்: அதுவே இருள் அகற்றும்'

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் பாரதநாட்டுத் தவப் புதல்வர் ஸ்வாமி விவேகானந்தா அவர்கள் இந்த யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தார். அதுசம்பந்தமான பொன்விழா சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியிற்கொண்டாடப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு, கராச்சி இராமகிருஷ்ண மடத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தா அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினுர்.

கூட்டத்துக்கு ஆயிரக்கான ஜனங்கள் சமூகமாயிருந்தனர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதபாகிரியர் ஸ்ரீ ஏ. குமாரசுவாமி எம். ஏ. அவர்கள் தலைமை வகித்து ஸ்வாமி ரங்கநாதானந்தா அவர்களை வரவேற்றுர். இற்றைக்கு 50 ஆண்டு காலத்துக்குமுன் எந்த இடத்தில், எந்த மேடையில் எழுந்தருளி விவேகானந்தர் இந்த யாழ்ப்பாண மக்களுக்கு ஹிதோபதேசம் புரிந்து சோர்ந்து கிடந்த ஹிந்துக்களைத் தட்டி எழுப்பி "எழுமின் விழிமின் கருதிய கருமம் கைகூடும்வரை சலியாதுழைமின்" எனச் சங்கநாதம் செய்தாரோ, அதேயிடத்தில் அந்த மேடையில், ஸுவாமி ரங்கநாதானந்தாஜியை வரவேற்பதற்குத் தமது மகிழ்ச்சியை ஸ்ரீ குமாரசுவாமி தெரிவித்தார். இன்னும் ஓர் தலைமுறை காலத்திலே, ஐரோப்பாவில் இரண்டு கொடிய யுத்தங்கள் நிகழ்ந்து மக்களைக் கொன்று குவித்து நமனுலகத்துக்கு ஏற்றிவிட்டன. அங்கே எல்லாம் பாழாய் விட்டன. சர்வம் நாசமாகிவிட்டன. உலோகாயுதத்தில் திளைத்துக் கிடந்த ஐரோப்பா அந்த உலோகாயுதத்தின் பலனை அநுபவித்துவிட்டது. அந்த ஐரோப்பாவுக்குச் சாந்தியில்லை; சமாதானம் இல்லை. அல்லோல கல்லோலமாகத் தவிக்கின்றது. இந்த நிலையில் ஐரோப்பிய மக்களுக்கும் அவர்களுடைய ஆதிக்கத்தில் அகப்பட்டு அவர்களின் "நாகரீக" வலைக்குள் விழுந்த மற்றைய சாதியினர்க்கும் இன்று உண்மையான சாந்தியையும் சமாதானத்தையும் காட்ட வல்லது எமது வேதாந்த மென்னும் பொக்கிஷமாகும். உலகாயுத இருளில் தவித்துக்கொண்டிருக்கும் உலக மக்களுக்கு வழிகாட்ட வேண்டியது வேதாந்த மென்னும் எங்கள் ஒளியேயாகும்,

"இவ்விஷயத்தில் ஹிந்துஸ்தானம் உலகிற்கு வேதங்களை, ஆகமங்களை அளித்த எங்கள் ஹிந்துஸ்தானம்—ஸ்ரீ கிருஷ்ணரை — புத்தரை—சமயகுரவரை—சங்கராசாரியரை சங்கரரை—இராமக்கிருஷ்ணரை — வேதாந்த கேசரி விவேகானந்தப் பெருந்தகையை ஈந்த பாரதவர்ஷம் செய்ய வேண்டிய தொண்டுகள் மகத்தானது. அந்த ஆரியநாடு இன்று தன் அடிமைத்தளையை அறுத்து, அகிலத்துக்கு வழிகாட்ட முனைவந்திருக்கிறது. அதன மாபெருந் தலைவர்களில் ஒருவராய், வேதாந்தத் துவஜத்தைக் கொடுசெல்லும் வீரபுருஷராய் உள்ள ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜிக்கு இந்த யாழ்ப்பாணம், இங்குச் சமூக மளித்தமைக்காக என்றும் கடமைப் பாடுடையது" என்று திரு. குமாரசுவாமியவர்கள் பலபடக் கூறினுர்.

இதன்பின் ஸ்வாமி ரங்கநாதானந்தாஜி ஓர்நிறைந்த உபந்நியாசம் செய்தார். சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தவாறு அந்தப் பிரசாரணம் இருந்தது. அதன் சாரம் இப்பத்திரிகையின் அடுத்த பிரசுரத்தில் வெளிவரும்.

நியாயதுரந்தரர் திரு. அ. அருளம்பலம் அவர்கள் நன்றியுரை கூறியதும் கூட்டம் நிறைவுற்றது.

## மரவரி முறை விஸ்தரிப்பு

இப்போது அநுட்டானத்திலிருக்கும் மரவரி முறையைப்பற்றி விசாரணை புரிந்து அறிக்கை விடுமாறு நியமிககப்பட்டுள்ள விசாரணைச்சபை இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. மரவரி முறையை ஒழிக்கக்கூடாது என்றும் அதனுற் பல நன்மைகள் உண்டென்றும் ஆகவே, அந்த முறையை மன்னுர், ஹம்பாந்தோட்டை, மாத்தறை கேகாலை முதலிய சில பகுதிகளிலும் அநுட்டானத்திற்கு விடலாம் என்றும் குறித்த விசாரணைச்சபை சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த அறிக்கை கூடிய சீக்கிரம் அரசாங்கசபையிற் சமர்ப்பிக்கப்படும்.

கடிதம்

## தேர்தல் சீர்திருத்த யோசனைகள்

ஐயா,

பொதுத் தேர்தல்களின்போது ஆள் மாருட்டங்கள் நடக்காமலிருப்பதற்காக நான் சில யோசனைகள் சொல்ல விரும்புகிறேன்.

தேர்தல் ஸ்தலத்திற்கு வந்து ஓட்டுப் போடும் ஒவ்வொரு வாக்காளரும் ஓட்டுப் போட்டுவிட்டு வெளியே போகையில் அவர்களது இடதுகைப்பெருவிரல்ரேகை அடையாளம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அதற்கு உபயோகிக்கப்படும் மை குறைந்தது பத்துமணி நேரத்திற்காவது விரலிலிருந்து அழிக்கமுடியாததாயிருக்க வேண்டும். இவ்விதம் செய்வதால் ஒருமுறை ஓட்டுப்போட்டவர்கள் மறுமுறை ஓட்டுப் போடமுடியாது ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய புகைப்படங்களுடன் கூடிய அடையாளச் சீட்டுக்களைக் கொடுப்பதென்பது அரசாங்கத்துக்கு அதிக பணச்செலவை உண்டுபண்ணுமென்பதோடு இந்தச் சீட்டுகளைக் கள்ளத்தனமாகத் தயாரிக்க முடியாதென்பதுமில்லை. பர்தா அணிந்த பெண்களைச் சுலபமாக அடையாளங் கண்டுபிடிக்க முடியாதாகையால் அவர்கள் ஒன்றுக்குமேற்பட்ட தடவை ஓட்டளிப்பதை அனுபவத்தில் நான் பார்த்திருக்கிறேன் கட்டைவிரல் ரேகை அடையாளமெடுப்பது மறுமுறை ஓட்டுக் கொடுப்பதைத் தடைசெய்வதாயிருக்கும்,

அரசாங்கப் பணத்திலிருந்து சம்பளம் பெறும் ஆசிரியர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் போலவே தேர்தல்களில் இந்த அபேட்சகருடைய பக்கத்திலுமிருந்து வேலைசெய்யாதபடி தடை செய்யப்படவேண்டும்.

தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னுலிருந்து மதுபான விற்பனையையும் நிறுத்திவைக்கவேண்டும்.

இப்படிக்கு
எம் குமாரசுவாமி

யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்கள் செய்யவேண்டியது யாது?

## தமிழர் முன்னிற்கும் பணி

### ஒற்றுமை வேண்டும்: இன்றேல் சீரழிவு

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

காலஞ்சென்ற மிஸ்ரர் எச். ஏ. பீ. சந்திரசேகரா அவர்கள் ஒருமுறை யாழ்ப்பாண மக்களின் அரசியல் ஞானத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில், "ஓர் தேர்தற்காலத்திலே, தம் பிரதிநிதிகளாக யார் யாரை அனுப்பவேண்டும் என்பதை யாழ்ப்பாண மக்கள் அறிவர். மற்றவர்கள் எப்படிப் போதித்தாலும் அவர்கள் தங்கள் புத்தியைக் கொண்டு சிறந்தவரையே தெரிவு செய்வர்" என்று கூறினார்: இன்று இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஓர் நெருக்கடியான காலம்; ஓர் சோதனைக்காலம் என்று கூறினும் பொருந்தும். இன்னும் ஏறக்குறைய 6 அல்லது 7 மாத காலத்தில் நிகழவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்களின் எதிர்காலவாழ்வு தங்கியிருக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கருமம் ஆற்றவேண்டும்.

* *

**நாம் சிறுபான்மையினர்**

பிரித்தாளும் கொள்கையுடைய மூன்றும்பேர்வழிக்காரன் இந்நாட்டைவிட்டு மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறாமல் இருக்கமுடியாது. உலகம் போகிறபோக்கில் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கு இனி இடமேயில்லை, ஆனால் நாளைக் கடத்தி இன்னும் சிறிது காலத்துக்காவது அதிகாரம் செலுத்தலாம் என்று பிரிட்டிஷார் மாத்திரமல்ல, இந்தோ சீனத்தில் பிரான்சியரும், இந்தனேஷியாவில் ஒல்லாந்தரும் கருமம் ஆற்றுகிறார்கள். இந்த இலங்கையிலும் பல பிரதான விவகாரங்களைப் பிரிட்டிஷார் தம் அதிகாரத்திலேயே வைத்திருக்கின்றனர். உள்நாட்டு அதிகாரம் முழுவதையும் இலங்கையர் வசமே விட்டிருக்கின்றனர். எனவே, இதுகாறும் இந்த நாட்டில் சிறுபான்மையினராக விருந்தவர்களுக்குப் பிரிட்டிஷார் செய்து வந்த சலாக்கியங்கள் இனியும் கிடைக்கும் என எண்ணியிருத்தல் வீண். இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினர். அதனை எவரும் ஒத்துக்கொள்ளவேண்டும்.

* *

**பாதிக்கப்படுவது யார்?**

இந்தநாடு முன்னேறவேண்டுமாயின், பெரும்பான்மையினராகிய சிங்களர்க்கும், சிறுபான்மையினராகிய தமிழர், முஸ்லீம்கள் முதலாம் ஏனைய சாதியினர்க்கு மிடையே உண்மையான ஒத்துழைப்பு வேண்டியது அவசியம், அந்த ஒத்துழைப்பு இன்றேல் நாடு ஓர்போதும் ஈடேறமாட்டாது. ஆனால் இவ்விஷயத்தில் நாம் ஓர்விஷயத்தை நன்கு சிந்திக்கவேண்டும். அதாவது, பரஸ்பரம் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும், பெரும்பான்மைச் சமூகத்தினராகிய சிங்களர், இனி வகுக்கப்படவிருக்கும் சோல்பெரி அரசியலின்படி அரசாள முடியும். இந்தியாவிலே, சென்னைமாகாணத்தில், பம்பாய் மாகாணத்தில், மத்தியமாகாணத்திலே, முஸ்லிமான்களுடைய ஒத்துழைப்பில்லாமல், காங்கிரஸ் அரசியல் நடத்துகிறது. இதுபோலவே சிந்துமாகாணம், வங்காளம் என்பவற்றில் காங்கிரஸ் ஒத்துழைப்பின்றி முஸ்லிம்லீக் ஆட்சி செய்கிறது. ஆகவே இதுபோலவே இலங்கையிலும் சிங்களரே அரசியலமைத்து, தமிழரை மாத்திரம், அல்லது ஏனைய சிறுபான்மையினரையும் புறக்கணித்து அரசியல் நிறுவித் தேசபரிபாலனம் செய்வார்களானால் அதனை நாம் தடுக்க முடியாது. அப்படி அவர்கள் செய்யும் காலத்திலே, பிரிட்டிஷார் எம்முடைய உதவிக்கு வருவர் என்பது வீண்! தமிழ் மக்கள், இராச்சிய நிருவாகத்தை நடத்தும் மந்திரசபையில் இடம்பெறாவிட்டால், அதனால் சிங்களமக்கள் ஓர்போதும் பாதிக்கப்படமாட்டார் தமிழ் மக்களே பாதிக்கப்படுவர்.

* *

**அபிப்பிராய பேதங்கள்**

டொனமூர் அரசியலின்படி நிருவாகசபைகள்மூலம் பரிபாலனம் நடைபெற்றது. அதன் பயனாக, ஒவ்வொரு தனி அங்கத்தவரும் தம் தொகுதிக்கேற்ற நன்மைகளைச் செய்ய இடமிருந்தது. ஆனால் இனிவரும் அரசியலில், ஒருவர் இருவரால் அல்லது ஓர் சிறிய குழுவினரால் எவ்விதமான கருமத்தையும் சாதிக்கமுடியாது. பாராளுமன்றம் கூடுகின்ற சமயத்தில், மந்திரிகளின் நடத்தையைக் கண்டிக்கமாத்திரம் அவர்களால் முடியுமேயன்றி. வேறு சாஸ்வதமான நன்மைகள் செய்யமுடியாது. தமிழ் மக்கள் இவ்விஷயத்தை நன்கு சிந்திக்கவேண்டும். துரதிர்ஷ்டவசமாகத் தமிழ்த் தலைவர்கள் என்றிருப்போர்க்கிடையே இப்போது அபிப்பிராயபேதம் எழுந்திருப்பது இச்சந்தர்ப்பத்தில் வருத்தத்திற்கிடமானது. இந்த அபிப்பிராயபேதங்களுக்கு இது காலம் அல்ல. சிங்களத்தலைவர்களுக்கிடையே அரசியல் விஷயமாக எழுந்த அபிப்பிராயபேதங்கள் யாவும் இன்று ஓரளவுக்குச் சமரசமாகத் தீர்க்கப்பட்டுவிட, அவர்கள்-சமசமாஜிகளை விட ஏனையோர்-ஒற்றுமைபூண்டு ஓர் கொடிக்குக் கீழ் நின்று தொண்டாற்ற முன்வந்தமையை நம் தமிழ்த் தலைவர்கள் சிந்தித்தால் என்ன? தமிழர்களோ மிகவும் சிறுபான்மையினர்; இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டால் என்ன? இப்போதுதானும் காலம் போய்விடவில்லை. தமிழ்மக்களின் பொதுநன்மையை உத்தேசித்து, தமிழ்த்தலைவர்கள் எல்லாரும் ஒன்றுசேரவேண்டும்.

* *

**தமிழ்மக்கள் செய்யவேண்டியது**

பொதுஜனங்களுக்கு வழிகாட்டவேண்டியவர்கள் தலைவர்கள். அப்படியிருக்க, வேலியே பயிரை மேய்ந்தவாறு, இத்தலைவர்கள் தமக்குள்ளே அபிப்பிராயபேதம் காரணமாகவும், வேறு பல ஏதுக்கள் காரணமாகவும் பிணக்குற்றால், பொதுஜனங்கள் இவர்களைத் தலைவர்கள் என்று எப்படி நம்பிப் பின்பற்றக்கூடும். கறந்த பால் முலைக்கேறப்போவதில்லை. நடந்த விஷயங்கள் நடந்தே விட்டன, எனவே பழைய சம்பவங்களைப் பாராட்டிப் பாராட்டிப் பேசாமல், பிணக்குக்களை வளர்க்காமல், தமிழ்ஜனத்தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரேவழியைக் கடைப்பிடித்து, சிங்களத் தலைவர்களுடன் ஒத்துழைத்து அதன்மூலமாக நாட்டுக்கு எத்தகைய நன்மைகளை ஆற்றலாம் என்பதனை நன்கு சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இவர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமை பூண்டு கருமம் ஆற்றுவிட்டால், அவர்கள் அனைவரையும் புறக்கணித்து இனி ஆற்றவேண்டிய கருமங்களைச் செய்யவேண்டியது தமிழ்ப் பொது மக்களது கடமையாகும். தலைமைப் பதவி என்பது ஒருவர் இருவர்க்குச் சீதனம் அல்லது முதுசொத்து அல்ல. அவர்களுக்குச் சொந்தமானது அல்ல. பொதுஜனங்களால் வழங்கப்பட்டது. அதற்குத் தக்கபடி இத்தலைவர்கள் நடந்துகொள்ளத் தவறினால் அப்பதவியினின்றும் அவர்களை நீக்கவேண்டும். இதுதான் தமிழ்மக்கள் முன்னிற்கும் பணி.

# தேசாதிபதியை நீக்குக

## பாராளுமன்றத்திற் கேள்வி

இலங்கைச் சமதர்மக் கட்சித் தலைவராகிய டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ, அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ஓர் அபேட்சகராக முன்னிற்கமுடியாது. அவர் இழைத்த அரசியற் குற்றங்களுக்காக அவர் சிறைசென்றிருக்கிறார். அதனைத் தேசாதிபதி மன்னித்து விட்டால் அவர் பாராளுமன்றத்து அபேட்சகராக நிற்கலாம். ஆனால் அந்த மன்னிப்பைத் தேசாதிபதி நல்க மறுத்துவிட்டார். தேசாதிபதி இப்படிச் செய்தது நியாயமாகுமா என்று இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் நிகழ்ந்த பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற் சில அங்கத்தவர்களாற் கேள்வி கேட்கப்பட்டது.

தேசாதிபதியின் "குறுகிய மனப்பான்மை"யைக் கண்டித்த மிஸ்ரர் ஸ்ரீபன்ஸ் என்னும் அங்கத்தவர் இத்தகைய ஓர் தேசாதிபதியை வேலையினின்றும் நீக்கவேண்டும் என்றும் ஆலோசனை கூறினர்.

பிரபல பிரிட்டிஷ்நியாயவாதியான மிஸ்ரர் டி. என். பிறிற் என்பவரே இப் பிரச்சினையைப் பாராளுமன்றத்திற் கிளப்பினர். "டக்ரர் விக்கிரமசிங்ஹ ஓர் நல்லொழுக்கம் உள்ள மனுஷன், உலகத் தொழிலாளர் சம்மேளனத்துக்கு இலங்கையின் பிரதிநிதியாகச் சென்றவர். அவர் விஷயத்தில் மன்னிப்புக் கொடுக்கும்படி இலங்கையரசாங்கசபையும், பல பொது ஸ்தாபனங்களும் கேட்டுக்கொண்டும் அவற்றின் வேண்டுகோளுக்குத் தேசாதிபதி செவி சாய்க்கவில்லை. சிறந்த தேசியவாதிகள் அடுத்த பாராளுமன்றத்திற் சேர்ந்து சேவையாற்றுவதை, தேசாதிபதியின் நடவடிக்கை தடுப்பதாகும். எனவே, தேசாதிபதி தன் தீர்மானத்தைப் புனராலோசனை செய்யும்படி குடியேற்ற நாட்டு மந்திரி கட்டளையிடவேண்டும்" என்று மிஸ்ரர் பிறிற் கூறினர்.

இவ்விஷயத்தில் தான் பிரவேசிக்க விரும்பவில்லை என்று குடியேற்ற நாட்டு மந்திரி பதிலிறுத்தார்.

# கலைக்கப் படலாமா?

## இந்திய அரசியல் நிர்மாண சபை

முஸ்லிம்லீக், தான் அதிலே பங்குபற்றாமல் விடுவதனால் அரசியல் நிர்மாணசபையின் தீர்மானங்கள் செல்லுபடியாகா; ஆகையினால், அந்தச் சபையை உடனே கலைக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. இப்படி அரசியல் நிர்மாண சபையைக் கலைப்பதற்கு இராஜப் பிரதிநிதிக்கேனும், பிரிட்டிஷ் மந்திர சபைக்கேனும் அதிகாரம் இருக்கிறதா? இந்தப் பிரச்சினை இன்று இந்திய அரசியல் விஷயமாக ஆற்றல், ஞானம் உள்ளவர்கள்மூளையைக் குழப்பி வருகிறது. இவ்விஷயமாக யூனைற்றெட் செய்தி ஸ்தாபன நிருபர் ஓர் பிரக்கியாதி வாய்ந்த அரசியல் நிபுணரிடம் ஆலோசனைகளைக் கேட்டார். அவருடைய அபிப்பிராயம் பின்வருமாறு:—

முதலாவதாக: பிரிட்டிஷ் மந்திரசபைக்கோஷ்டி இந்தியாவுக்கு விஜயஞ் செய்து மே மாதம் 16-ந் திகதி வெளியிட்ட அறிக்கையில், அரசியல் நிர்மாணசபை கலைக்கப்படுவது சம்பந்தமாக - அதாவது அது தன் வேலையை முடிக்குமுன் - ஒன்றும் கூறவில்லை.

இரண்டாவதாக: இந்திய அரசியல் நிர்மாண விஷயமாக எழுந்த பலவித மான அபிப்பிராய பேதங்கள் எழும் என்பதை பிரிட்டிஷ் மந்திரிகள் ஏற்கெனவே அறிந்திருந்தனர் இந்த அபிப்பிராய பேதங்களை இன்ன இன்ன விதமாகத் தீர்க்கவேண்டும் என்று வழிவகைகளைக் காட்டியிருக்கின்றனரேயன்றி, அபிப்பிராய பேதங்கள் காரணமாக அரசியல் நிர்மாணசபையை, அதுதன் கருமத்தை முடிக்குமுன் கலைக்கலாம் என்று எந்த இடத்திலாவது குறிப்பிடவில்லை.

மூன்றாவதாக: அரசியல் நிர்மாண சபையைக் கலைப்பதற்கான அதிகாரம், இராஜப் பிரதிநிதிக்குச் சட்டபூர்வமாக அளிக்கப்பட்ட பலவிதமான அதிகாரங்களிற் சேர்க்கப்படவில்லை.

நாலாவதாக: அரசியல் நிர்மாண சபையைக் கூட்டுவது, அதனைத் தவணையிடுவது முதலாம் கருமங்கள் அச்சபையின் தலைவரின் அதிகாரத்திலேயே உள்ளன. இந்திய மத்திய சட்டசபையைத்தான் இராஜப் பிரதிநிதி எதுவும் செய்யலாம். ஆனால் இந்த அரசியல் நிர்மாண சபையில் அவருடைய அதிகாரத்துக்கு இடமேயில்லை.

ஐந்தாவதாக: அரசியல் நிர்மாண சபையின் இப்போதைய நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கம்தானும் தலையிட அதிகாரம் இல்லை.

**பெண் மந்திரி மரணம்**

பிரிட்டிஷ் மந்திரசபையில் கல்வி மந்திரியாயிருந்த மிஸ். எலென் வில்க்கின்ஸன் என்னும் பெண் சென்ற செவ்வாய்க்கிழமை தேகவியோகமாயினர்.

---

மே மாதம் 16-ந் திகதி வெளியான பிரிட்டிஷ் மந்திரிகள் அறிக்கைப்படி, அந்த அறிக்கையின் 15 வது பந்தியில் விதித்தவாறு அரசியல் நிர்மாணசபை அரசியலை வகுத்தபின்னர்த்தான், அதனை ஏற்பதா நிராகரிப்பதா என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் யோசிக்கவரும். அதற்குமுன். இடையிற் பிரவேசிக்க அந்த அறிக்கையில் எவ்விதமான விதியும் சேர்க்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வி

## கல்விமந்திரி விளக்கம்

"கல்வி என்பது ஒவ்வொருவருக்கும் உரிமையாகும். செல்வராயுள்ளவர்தான் தம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டி சர்வகலாசங்கப்படிப்புவரை அவர்களுக்குக் கொடுத்து, கல்வியினால் வரும் பயனை அடையவேண்டும் என்பது ஓர் சிலரின் கருத்தாயிருக்கிறது. அது அப்படியல்ல. இந்தநாட்டிற் பிறந்த ஒவ்வொருவர்க்கும் அது உரிமை: எந்த ஏழைதானும் தன் பிள்ளையைச் சர்வகலாசங்கப்படிப்புவரை கல்வியூட்ட அவனுக்கு உரிமையிருக்கவேண்டும். இதுதான் என் இலவசக்கல்வித் திட்டத்தின்முறை"

என்றிவ்வாறு கல்விமந்திரி டக்ரர் கன்னங்கரா தண்டகமுவா மத்திய பாடசாலையைத் திறந்துவைக்கையிற் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:

"நான் சமீபகாலத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது, அங்குள்ள பெரியார் என்னைப் போற்றிக் கனம் செய்தனர். ஏன்? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே யில்லாத ஓர் இலவசக் கல்விமுறையை வகுத்து ஏழை மக்களுக்கு நிவாரணம் அளித்த ஓர் பெரியார் என்று என்னைக் கருதிய படியினால்தான்.

"ஆனால் இலங்கையில் உள்ள சிலர் என்னைக் கண்டபடி தூஷிக்கிறார்கள் நான் கிறிஸ்தவர்களுக்கு விரோதமானவன் என்று சொல்லுகிறார்கள். நான் எச்சமயவாதிகளுக்கும் மாறுபட்டவன் அல்ல கிறிஸ்துவபள்ளிக்கூடங்களை மூடிவிடவேண்டும் என்று நான் கூறவில்லை. அவை நல்லாய்நடக்கட்டும். ஆனால், அப்பள்ளிக்கூடங்களிலே படிக்கும் மாணவர்க்கு, கிறிஸ்தவ மதத்தை மாத்திரம் போதிக்காமல், மாணவர்களது சொந்த மதத்தையே போதிக்கவேண்டும் என்று நான் கூறுகிறேன். இப்படி நான் கூறுவது பிழையா? இதன் பொருட்டு நான்தேசததுரோகியா?"

# 1 கோடி ரூபா!

## புகைரதப்பகுதியால் நட்டம்

கடந்த ஒக்டோபர்மாதம் தொடக்கமாக மூன்றுமாத காலத்திற்குள் புகைரதப்பகுதியினால் 20 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுவிட்டதென்றும், இந்த நிதிவருடம் முடிவதற்கிடையில் எல்லாமாக 1 கோடி ரூபா நட்டம் ஏற்படலாம் என்றும் போக்குவரத்துப்பகுதி மந்திரியான மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்த அரசாங்க சபைக் கூட்டத்திற் கூறினர்

இப்படியாக நட்டம் வருவதற்குக் காரணம், புகைரதப்பகுதியிற் கடமைபார்ப்பவர்களுக்குக் கொடுக்கும் வேதன அதிகரிப்பும், புகைரதப்பகுதியைப் பாதுகாக்கும் செலவு அதிகரிப்பும்தான் என்று மிஸ்ரர் கொத்தலாவலை கூறினர்.

## ஸ்ரீ தி. உருத்திரா அவர்கட்கு வரவேற்பு

புரொபெசர் தி. உருத்திரா அவர்களின் பிறந்த ஊராகிய வட்டுக்கோட்டையின் வாசிகள், அவர் கொழும்பு நகரசபைக்கு அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையைப் பாராட்டுவதன் நோக்கமாக அவருக்கு ஓர் வரவேற்பு இம்மாதம் இரண்டாம் திகதியன்று வட்டுக்கோட்டை கிராமசேவா சங்கத்தின் ஆதரவின்கீழ் மிக விமரிசையாய் நடாத்தினர்கள். அவ்விழா திருவாளர் S R. கனகநாயகம் அத்துவக்காத் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது திரு. உருத்திரா அவர்கள் தபால்கந்தோர் சந்தியிலிருந்து மேள வாத்தியத்துடன் அழைக்கப்பட்டனர்

எல்லோரும் அவரது தேகப்பயிற்சியின் முதன்மையையும், அவர் ஓர் தமிழனாயிருந்தும் சிங்கள நாட்டில் சிங்கள சகோதரர்களால் தங்கள் சாதியார் ஒருவரிலும் பார்க்க இவரே தங்களுக்கு உகந்தவரென தேர்ந்தெடுக்கப்பட்டமையையும் மிகவும் பாராட்டினார்கள். எங்கள்நாட்டுத்தலைவர்களெல்லோருக்கும் இவரது செயல் ஓர் முன்மாதிரியாக இருக்கவேண்டுமெனக் கூறினார்கள்.

அத்தருணம் திருவாளர் க கனகரத்தினம் இளைப்பாறிய அரசாங்க முதன்மைக் கணக்குப் பரிசோதகரும், சி. கந்தசாமி, பிறக்ராசும், முதலியார் வே. செல்லப்பாவும், N. ஏகாம்பரம் பிறக்ராசுமே, னும் சொற்பொழிவு ஆற்றினார்கள், கடித

## பிள்ளைகள் பெற்றவர்க்கு

### அரசாங்க உதவிசெய்ய ஆலோசனை

ஒருவனுக்கு மாதவருமானம் மிகக் குறைவு: ஆனால் அவனுக்கோ பிள்ளைகள் அநேகர் பிறந்திருக்கிறார்கள். இந்தக் குடும்பம் அற்பமான 100 ரூபாவுடன் ஜீவிக்க முடியுமா? இந்தப் பெரிய பிரச்சினையைச் சமூக சேவா விசாரணைச் சங்கம் ஆராய்ந்து, இவ்விஷயமாக ஓர் முன்னேற்றமான சிபாரிசினைச் செய்திருக்கிறது

ஓர் குடும்பத்திலே பள்ளிக்கூடம். போகிற பிள்ளைகள் — அதாவது 5 தொடக்கம் 14 வயது வரையுள்ள பிள்ளைகள் — இருவருக்குமேல் இருந்தால், அதிலும் பெற்றாராயுள்ளவர்க்கு 100 ரூபாவுக்குக் குறைந்த மாத வருமானம் இருந்தால் அரசாங்கம் அக் குடும்பத்துக்குப் பண உதவி செய்யவேண்டும் என்று குறித்த விசாரணைச் சங்கம் அரசாங்கத்துக்குச்சிபாரிசுசெய்திருக்கிறது. இப்படியான உதவிகள் செய்வதற்கு ஆண்டுதோறும் 3 கோடி ரூபா அரசாங்கத்துக்குச் செலவாகலாம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சபையில் டக்ரர் ஐவர் ஜெனிங்ஸ், வண சுவாமி. பீற்றர்ப் பிள்ளை, மிஸ்ரர் என். ஈ. வீரசூரிய, ஸ்ரீ தாஸ்குப்தா என்பவர்கள் அங்கத்தவர்களாவர்.

அரசாங்கம் பெற்றார்க்கு இவ்வாறு உதவி செய்யுமானால், ஏற்கெனவே வருமானம் இல்லாத குடும்பங்களில் பிரஜோற்பத்தி அதிகமாகிவிடும் என்பதை விசாரணைச்சபை உணர்ந்தபோதிலும் எதிர்கால மக்களாக வரும் இந்நாட்டுப் பிள்ளைகளின் க்ஷேமலாபத்தில் அரசாங்கம் பராமுகமா யிருக்காது, இவ்விஷயத்தில் கட்டாயம் உதவிசெய்தே தீரவேண்டும் என்று மேற்படி விசாரணைச் சங்கம் கருதுகிறது.

# பேராபத்து!

## வருகிறது என்கிறார் சேர். ஒலிவர்

சென்ற வெள்ளிக்கிழமை, புதிய வரிகள் விதிப்பது சம்பந்தமாகப் பேசிய சேர் ஒலிவர் குணத்திலகா (நிதிக் காரியதரிசி) ரப்பர் விலை வீழ்ந்தமையினாலும், ரப்பர் வர்த்தகம் மந்தநிலை யடைந்தமையினாலும் இலங்கைக்குப் பேராபத்து நிகழக்கூடும் என்று தெரிவித்தார்.

ரப்பர் விலை வீழ்ந்து இந்தக் கேவல நிலைமை ஏற்பட்டபடியினால் இந்நாட்டுக்கு ஆண்டுதோறும் 30 கோடி ரூபா நட்டம் ஏற்படும் என்றும், இதனைச் சரிப்படுத்த தேயிலை, கொப்பரா என்பவற்றுக்கு நல்ல விலை பெற்று, அந்த வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிகள் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார். அப்படிச் செய்யாவிட்டால், எம் நாட்டின் எதிர்காலம் என்ன நிலையடையுமோ சொல்லத் தெரியாது என்று சேர் ஒலிவர் கூறினர்.

# இந்திய அரசியல்

## மகாத்மாவின் வேண்டுகோள்

மகாத்மாகாந்தி இப்போது கிழக்கு வங்காளத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார் சென்றவாரம் ஓர் கிராமத்தில் பிரார்த்தனைக் கூட்டத்தின்போது, அவர் முஸ்லிம் லீக் அரசியல் நிர்மாணசபையிற்சேர மீண்டும் மறுத்ததைக் குறிப்பிட்டார். இவர் கூறியதாவது: அரசியல்நிர்மாணசபையில் முஸ்லிம்லீக்கர் பங்கு பற்றவேண்டும் அங்கே ஏதும் பிழை நேர்ந்தால் அவர்கள் அதனைக் கண்டித்து வெளியேறலாம். அங்குசேர்ந்து அவர்கள் தங்கள் நிலைமையை விளக்கவேண்டும். இதுதான் அவர்கள் இந்நாட்டுக்கும் தங்கள் சமூகத்துக்கும் செய்யக்கூடிய பெரிய சேவையாகும் பிரிட்டிஷாரின் கொள்கை விஷயமாக மகாத்மா பின்வருமாறு கூறினர்: "இந்தியா விஷயத்தில் அவர்கள் மனப்பூர்வமான விசுவாசத்துடன் நடப்பார்களானால் அவர்களுடைய நல்லெண்ணத்தில் இனியும் இந்தியா நம்பிக்கையை இழக்காதிருக்க வேண்டுமானால், பிரிட்டிஷார் தாம் விடுத்த அறிக்கைப்படி உடன் கருமம் ஆற்றவேண்டும் காலம் கடத்தக்கூடாது.

○

## கண்டனத் தீர்மானம்

இற்றைக்குச் சில காலத்துக்குமுன் வடமேற்கெல்லைப்புறத்தில் உள்ள மலைஜாதியினர்மீது கொடூரமான நடைவடிக்கையை இந்திய அரசாங்கம் எடுத்ததைக் கண்டிக்கும்முகத்தால் சென்றவாரம் நிகழ்ந்த இந்தியச் சட்டசபையில் முஸ்லிம்லீக் கட்சி ஓர் கண்டனத் தீர்மானத்தை எடுத்தாண்டது. அத்தீர்மானத்தைலீக்கர்மாத்திரமே ஆதரித்தனர். ஆகக்கூடி 16 பேர்தான் சாதகமாக நின்றனர். ஆகவே தீர்மானம் படுதோல்வியடைந்தது. வாக்கெடுப்பின்போது இடைக்கால அரசாங்கத்தில் லீக் மந்திரிகளாயிருக்கும் மிஸ்ரர் லியாகத் அலிகானும், மிஸ்ரர் ஐ. ஐ, சந்திரிகரும் சபையிற் பிரசன்னமாயிருக்கவில்லை,

○

## பெருர் அரசியற் பிரச்சினை

இந்தியச் சட்டசபையில் உள்ள லீக்கரின் இச்செயல் ஓர்பெரிய அரசியற் பிரச்சினையை இன்று கிளப்பியுள்ளது. இன்று இந்திய அரசாங்கத்தை காங்கிரஸ், லீக் என்னும் இரு கட்சியினரும், ஏனைய சிறுபான்மையினருமே நடத்துகிறார்கள். காங்கிரஸ் லீக் மந்திரிகள் செய்யும் வேலைகளுக்கு ஜவாப்தாரி சட்டசபையில் உள்ள காங்கிரஸ்—லீக் அங்கத்தவர்களாகும். இதுதான் அரசியற் சம்பிரதாயம். எனவே, இவ்விஷயத்தில் லீக்கர் கண்டனத் தீர்மானம் எடுத்தாண்டமை அரசியற் சம்பிரதாயத்துக்கே முரணானதாகும் என்று இடைக்கால அரசாங்கத்தில் உள்ள காங்கிரஸ மந்திரிகளும், சிறுபான்மை மந்திரிகளான மற்ற மூன்று மந்திரிகளும் கருதுகிறார்கள். அதாவது, இன்று ஆங்குள்ள 14 மந்திரிகளில் 9 பேர் இவ்விஷயத்தில் லீக்கரின் செய்கை அடாத்தானது; ஜனநாயக சம்பிரதாயத்துக்கு முரண்பட்டதாகும் என்று கருதி, இப்படிப்பட்ட லீக்கரின் பிரதிநிதிகளாய மறற 5 பேருடன் ஒத்துழைப்பது துர்லபம் என்று இராசப்பிரதிநிதிக்குத் தெருட்டியிருக்கிறார்கள். மந்திரிகள் அனைவரும் ஒற்றுமையுடன் கருமம் ஆற்றவேண்டும்; ஒற்றுமையை விரும்பாதவர்களை வெளியே தள்ளிவிடவேண்டும் என்று லீக் பிரதிநிதிகளை இடைக்கால அரசாங்கத்திலிருந்து அகற்றவேண்டும் என்று இவர்கள் இராஜப் பிரதிநிதிக்குத் தெரிவித்துள்ளனர்.

○

## லீகரை விலக்கவேண்டும்

இவ்வளவுடன் விஷயம் நிற்கவில்லை. காங்கிரஸ், பிரிட்டிஷ் மந்திரிகளின் அரசியல் திட்டம் சம்பந்தமாக பிரிட்டிஷ அரசாங்கம் டிசெம்பர் மாதம் 6-ம் திகதி விடுத்த வியாக்கியானத்தை ஏற்றுக்கொண்ட பின்பும், முஸ்லிம்லீக் குதர்க்கம் பேசி அரசியல் நிர்மாணசபையைப் பகிஷ்கரித்துவிட்டது. இது அடாத ஓர் விஷயம். பிரிட்டிஷ் மந்திரிகளின் நீண்டகாலத் திட்டத்தை ஒப்புக்கொண்டு அரசியல் நிர்யாண சபையிற் பங்குபற்றினால்தான் இடைக்கால அரசாங்கத்தில் லீக்கர் இருக்க உரிமை யுடையவராவர். வழவழா நியாயம்கூறி நீண்ட காலத் திட்டத்தைப் பகிஷ்கரித்துள்ள முஸ்லிம்லீக்கர், இனியும் இடைக்கால அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்க யோக்கியரல்லர். எனவே, அவர்களை நீக்கிவிடவேண்டும் என்று காங்கிரஸ் மந்திரிகளும் மற்றும் 3 மந்திரிகளும் இராஜப்பிரதிநிதியை நெருக்குவதாகத் தெரிகிறது. இராஜப்பிரதிநிதி இவ்விஷயமாகப் பிரிட்டிஷ் மந்திரிகளுடன் டெலிபோன் மூலம் சம்பாஷணை நிகழ்த்துகிறார். இவ்வாரத்துள் சகல விஷயங்களும் தெளிவாகலாம்.

## அகிலஇலங்கைச்சைவஇளைஞர் மத்திய மகாசபை

மேற்படி சபையின் ஆதரவில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் அரசாங்கசபையில் நிறைவேற்றவிருக்கும் கல்விச் சட்டம் சம்பந்தமான குறைகளை அரசினர்க்குத் தெரிவிப்பதற்கு 2-2-47இல் ஓர்பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது,

தலைவர் கூட்டத்தின் நோக்கத்தைச் சுருக்கமாக்க் கூறியபின், பின்வரும் பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டன.

1 எல்லாப் பாடசாலைகளிலும் மாணவருக்கு அவர்தம் பெற்றோரின் சமயம் அவ்வச் சமய ஆசிரியரால் கற்பிக்கப்படல் வேண்டும். பிரேரித்தவர் திரு S. இராசரத்தினம் (நியாயதுரந்தரர்).

2· முகாமைக்காரரின்சமயத்தில் உள்ள பிள்ளைகளின் வருடாந்தச் சராசரி 30 உள்ள பாடசாலைகளுக்கே அரசினர்உதவி நன்கொடைப் பணம் அளிக்கப்படல் வேண்டும். மேலும் புதுக்கப் பாடசாலைகளில் சேர்க்கும் முகாமைக்காரரின் சமயத்திலில்லாத பிள்ளைகள் சராசரிக்கு எடுத்துக்கொள்ளப்படாது: பிரேரித்தவர், திரு. S அம்பிகைபாகன், B A

3; தஞ்சமயப் பிள்ளைகளின் சராசரி 30 காட்டக்கூடிய பாடசாலைகளை ஸ்தாபிப்பதற்கு அரசினர் எச்சமயத்தவருக்கும் அநுமதியளிக்கவேண்டும். பிரேரித்தவர் திரு, C. நாகையா தலைவர் அ. இ, சை, இ. ம. ம. ச.

4. சைவசமயக் கொள்கைகளுக்குப் பாதகமான பொருளுள்ள நூல்களை பாடசாலைகள் ஒரு வகுப்புக்கும் பாட புத்தகமாக வைக்கப்படாதென இச்சபை தலைமையாசிரியர்களையும் முகாமைக்காரரையும் வித்தியாபகுதியாரையும் கேட்டுக்கொள்ளுகின்றது, பிரேரித்தவர் ம. வே. திருஞானசம்பந்தன், ஆசிரியர் 'இந்துசாதனம்".

5. சைவப் பாடசாலைகள் எல்லாவற்றிலும் எல்லா வகுப்புக்களிலும் சமய பாடம் கட்டாய பாடங்களுள் ஒன்றாகப் படிப்பிக்கப்படல்வேண்டுமென்றும் வகுப்பில் சித்திபெய்தற்கு சமய பாடத்திலும் மாணவர் சித்தியடைய வேண்டுமென்றும் இச்சபை தலைமையாசிரியர்களையும் முகாமைக்காரரையும் கேட்டுக்கொள்ளுகின்றது: பிரேரித்தவர் திரு த. குமாரசுவாமிப்பிள்ளை, இராமநாதன்கல்லூரிச் சமயபாட ஆசிரியர்:

6. மேற்படி பிரேரணைகளுக்கு அனுகூலமாக முயற்சிசெய்யும் அபேட்சகர்களுக்கே வரும் பாராளுமன்றத் தேர்தலில் சைவர்கள் தமது வாக்குரிமையைக் கொடுக்கவேண்டுமென்று சைவர்கள் யாவரையும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது. பிரேரித்தவர் திரு. அ. அருளம்பலம் நியாயதுரந்தரர்.

—கடித.

## 700 பொலிசர்

அடுத்த ஆறு மாசத்திற்குள், இலங்கைப் பொலிசர் படைக்கு இன்னும் 700 பேர்வரை புதிதாகச் சேர்க்க இலங்கையரசாங்கம் முயற்சி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துவணவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

பேரவாகுவை யுடையவ னிளவல்பே ரருளாற்
சூரவாகுலம் வானவர் பெருவகை தொலைப்பான்
ஏரவாகுறுஞ் செம்மணிப் பாவைதன் னிடத்தில்
வீரவாகுவந் துதித்தன னுலகெலாம் வியப்ப

பெருச்சாளியை வாகனமாகவுடைய விநாயகப் பெருமானது தம்பியாராகிய சண்முகக் கடவுளின் கட்டளைப்படி, சூரபன்மன் செய்யும் துன்பத்தை மேலும் தேவர்கள் அடையாவண்ணம் ஒழிக்கும்படி, அழகிற்குரிய இயல்பனைத்தும் அமைந்த மாணிக்கவல்லி யென்னுஞ் சத்தியிடத்து, எல்லா உலகங்களிலுள்ளா ரெவரும் பாராட்டும் வண்ணம் வீரவாகுதேவர் வந்து அவதரித்தார் என்பது கருத்து.

முருகக்கடவுளைக் கூறுமிடத்து வேறு அடைகொடுத்துக் கூறாது பேரவாகுவை யுடையவனிளவல் எனக் கூறியமை இளவலுடைய திருவருளோடு விநாயகப்பெருமானுடைய அநுக்கிரகமுஞ் சேர என்பதை ஞாபகப்படுத்துதற்குப்போலும்: அருள் என்னுஞ் சொல் இங்கே கட்டளை அநுக்கிரகம், என்னும் இருபொருளைத் தந்து நிற்றலின் இரட்டுறமொழிந்ததாகும்; மகேந்திரபுரிக்குத் தூது சென்றதும், சூரன் முதலிய மூவரையுந் தவிர, பானுகோபன் முதலிய அசுர வீரர்களோடு வீரவாகுதேவர் எதிர்த்துப் பொருததும் முருகக்கடவுளுடைய கட்டளைப்படியாம்; தூது சென்றபோதும் சென்று மீண்டபோதும் நேர்ந்த ஆபத்துக்களையும், யுத்தம் நிகழ்ந்தபோது பானுகோபன் மாயாபாசத்தினால் வீரவாகு முதலாம் இலக்கத்தொன் பதின்மரையும் ஏனைய பூதவீரர்களையும் பூதர்களையும் மாயாபாசத்தினாற் கட்டிக் கடலிலிட, வேற்படையை விடுத்து அவர்களை மீட்டதுவும், இன்னபிற செயல்களும் முருகமூர்த்தி செய்த அருட்செயல்களாம். சூரபன்மனுடைய புதல்வர்களுட் பானுகோபனும் அக்கினிமுகனும் யுத்தஞ் செய்யுந் திறமையிலும் படை வலிமையிலுஞ் சிறந்தவராவர்: இவ்விருவரையும் வீரவாகுதேவர் முருகக்கடவுளின் விசேட அருள்பெற்று வென்றாரென்பது யுத்தகாண்டத்தாற் புலப்படக்கிடக்கின்றது; பானுகோபன் வீரவாகுதேவருக்கு எற்ற பகைவனென்பது:

'பொங்குகிரிகளிற்றலைமையோதும்போதுபொற்புடையபொற்கிரிமுன் னிற்குமாபோ
றங்குதிறற்புகழ்வீரர்தம்மையெண்ணிற்றானேமுன்னெண்ணவருந்தலைமையாளன் [ற்
பங்கமிலா நீடிலகை மூடுமல்லின் பகைவனவன் பகைவனவன் பகைவனானோன்
மங்கலிலாப் புகழ்வீர வாகுவாய வரிசிலைக்கைக் குரிசிலையாம் வணங்கல்செய்வாம.'

என்பதனால் இனிது விளங்கும்; இங்கே அல்லின் பகைவனென்றது சூரியனை, அவன் பகைவனென்றது பானுகோபனை, அவன் பகைவனென்றது வீரவாகுதேவரை யென்க; ஈற்றடியில் வீரவாகு உதித்தனனென்றது வந்துதித்தன னென்றது, சுந்தரமூர்த்தி நாயனாரும் திருநந்தி தேவரும் முன்னர் வந்துதித்தவாறு இவ்வீரவாகுதேவர் முதலாம் நவவீரரும் பூர்வ ஞானத்தோடு திருவருளின் பிரகாரம் கருப்பத்தில் வந்து தோன்றியமையினாலென்க; இங்கே உலகெலாம் வியப்ப என்பதற்கு உலகத்திலுள்ளவர்களனைவருமெனப் பொருள்கொள்ளாது, எல்லா உலகங்களிலுமுள்ளாரெனப் பொருள்கொள்ளப்பட்டமை, சூரபன்மனுக்குரிய ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ளாரும் வீரவாகுதேவரின் வெற்றிப்பாட்டை யுணர்ந்தமையினாலாம்; இளவல் பேரருளாற் சூரவாகுலம் வானவர் பெருவகை தொலைப்பான் செம்மணிப்பாவை தன்னிடத்தில் உலகெலாம் வியப்ப வீரவாகுவந்துதித்தனன் எனக்கொண்டு கூட்டிப் பொருள்கொள்க.

[பேர + ஆகு—பெருமையினையுடைய பெருச்சாளி; அனேக தவஞ் செய்த சயமுகனது அவதாரத்ததாய் விசிட்டம்பெற்றதால்இங்கேபேர ஆகு என்றார்; பேர, ஏர, என்பன குறிப்பு வினைப்பெயரெச்சம்; இரத்தினப் பரீக்ஷையிற் கூறிய விதியமைந்த மணியென்பது போதர "ஏரவாகுறுஞ் செம்மணி" யென்றார்] (25)

விரள வல்லியார் தந்திசூ ரரிவிபன் படையாங்
கரள வல்லினை யகற்றுவா னெழுந்தவெண் கதிர்போற்
றிரள வல்லினை யனையபூண் முலையுடைத் தெய்வத்
தரள வல்லிபாற் றோன்றினன் வீரகே சரியே

நெகிழ்ச்சியோடு கூடிய விலங்கு (சங்கிலி) இடப்பட்ட யானையின் முகத்தையுடையவனாகிய தாரகாசுரனுஞ் சூரபன்மனும் சிங்கமுகனுமாகிய இவர்களுடைய பெரிய சைநியங்களாகிய, கரிய தடித்த இருளை ஒழிக்கும்படி உதித்த (பூரண) சந்திரனைப்போல, திரட்சியுடைய சூதாடு கருவியை நிகர்த்த, ஆபரணங்கள் படிந்த தனங்களையுடைய தெய்வத்தன்மை பொருந்திய நித்தில (முத்து) வல்லியென்னுஞ் சத்தியினிடத்து வீரகேசரி யெனபவர் உதித்தார் என்பது கருத்து.

தம்மைப்பெற்ற தாயின் நிறமே தமக்கு அமைதலாலும், தாயின் நிறம் முத்தின் தண்ணிய வெண்மைநிற மாதலாலும், முத்தினொளி வெண்மையும் தண்மையும் நோக்கி நிலவிற்கு ஒப்பிடப்படுதலாலும் இங்கே நித்திலவல்லிபால் உதித்த வீரகேசரியை "வெண்கதிர்போல்" எனச் சிறப்பித்துக் கூறினாரென்க; பூரண சந்திரனைக் கன்றிப் பிறைச் சந்திரனுக்குக் கரிய தடித்த இருளை யோட்டும் ஆற்றலில்லையாதலினாலும், மாலைக்காலத்திற் கிழக்குக்கடலில் உதயஞ்செய்யும் பூரணசந்திரனென்பது "எழுந்த" என்ற பெயரெச்சத்தில் தொனிப்பதனாலும் வெண்கதிர்க்குப் பூரணசந்திரனெனப் பொருள் கொள்ளப்பட்டது. வீரவாகுதேவருக்கு நேர் இளைய சகோதரராய்ப் படைத்துணையாக நின்று சமர்செய்து அசுரவீரர்களையும் அவர்கள் படையையும் வதைத்தமையினால், வீரவாகுவைச் சூரியனுக்கு ஒப்பாக்கி "உதித்தனன்" என மேலேயுள்ள திருவிருத்தத்திற் குறிப்பாற்கூறி, இத் திருவிருத்தத்தில் வெண்கதிர்போற் றோன்றின னென்றார்.

[விரளவல்லியார் தந்தியென்பது, "தூம்புடை நெடுங்கைவேழஞ் சுற்றிய வெள்ளில்" என்பதுபோல் நின்றது: கரணம் கருமை; திரள மென்பதும் மேற்கூறியபடி குறிப்புவினைப் பெயரெச்சம்; ஆறும் வேற்றுமைப் பொருள் தொனித்து நிற்கின்றதே, அங்ஙனமாதலின் ஆறும்வேற்றுமைத் தொகையென்னுது, குறிப்புவினைப் பெயரெச்சமென்ற தென்னையோ வெனின், குறிப்பு வினைப்பெயரெச்சம் ஆறும்வேற்றுமைப் பொருளிடத்தும் ஏழாம்வேற்றுமைப் பொருளிடத்ததுமா மாதலினென்க. திரள வல்லினை - [illegible] கருவியை] (26)

# பெருந் தொகையான தானியங்கள்

## மூன்று கப்பல்களில் வந்திருக்கின்றன

கொழும்புத்துறைமுகக் கிட்டங்கிகளில் பல்லாயிரக்கணக்கான மூடை பருப்பு வகைகளும் தானியங்களும் கிடக்கின்றன. சோழம், பயறு, பெரும்பயறு, முத்திரிகைக் கொட்டை, பார்ளிஅரிசி, டஜ்ரி, உழுந்து, கடலை, மொச்சை முதலிய பலவித மான தானியங்கள் தென்னாபிரிக்கா, போர்ட்செட், ஏடென் முதலாம் இடங்களிலிருந்து வந்திருக்கின்றன.

இத்தானியங்கள் இரண்டு கப்பல்களில் கடந்த சில தினங்களுக்குள் இங்கே வந்துள்ளன. 1 கோடியே 56 லட்சம் இருத்தல் தானியவகைகள் இப்படியாக இக்கிட்டங்கிகளிற் கிடக்கின்றன என்று தெரிகிறது ஏற்கெனவே இலங்கையில் இத்தானியங்களின் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. அவற்றுக்கு எவ்விதமான தட்டுப்பாடும் இல்லை. அப்படியான இந்தச் சமயத்தில் இவ்வளவு பெருந் தொகையான தானியங்களையும் என்ன செய்வது என்று வியாபாரிமார் தியங்குகிறார்கள்.

இவற்றை இறக்குமதி செய்த வியாபாரிமார்கள், ஒன்றில்இம் மூடைகளை எடுக்காமல் விடவேண்டும்; அல்லது எடுத்து மிகக்குறைந்த விலையில் விற்கவேண்டும். அவற்றை வேறும் துறைமுகங்களுக்கு அனுப்பவொண்ணாது என்று உணவுப்பகுதி அதிகாரியான ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை கண்டிப்பான கட்டளை விதித்திருக்கிறார். "இத்தேசத்துக்குள் வந்த தானியங்களை வேறு ஊர்களுக்கு அனுப்ப நான் ஒருபோதும் விடமாட்டேன்" என்றுஸ்ரீ கே. ஆழ்வாப்பிள்ளை ஓர் பத்திரிகை நிருபருக்குத் தெரிவித்தார்.

மேலே குறித்த இரண்டு கப்பல் தானியங்களைவிட இன்னோர் கப்பல் சென்ற சனிக்கிழமை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. அதுவும் 71 லட்சத்து 68 ஆயிரம் இருத்தல் தானியம் இந்த நாட்டுக்குக் கொண்டுவந்திருக்கிறது.

முந்திப்போல அரசாங்கம் சிலவற்றைவாங்கும்எனவியாபாரிமார் எதிர்பார்த்தனர் ஆனல் அவற்றைவாங்குவதற்கு உணவுப்பகுதி அதிகாரி மறுத்துவிட்டார். இத்தானியங்களைத் தேவையில்லை என்று அரசாங்கம் ஏற்கெனவே வர்த்தகர்க்கு அறிவித்ததும் அவர்கள தமது எண்ணப்படி இறக்குமதி செய்துவிட்டு, இப்போது அரசாங்கத்தை வாங்கும்படி கேட்டல் முறையாகாது என்று ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை கூறுகிறார்.

—

## ஒரு படி அரிசி

அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் ஆள் ஒன்றுக்கு ஒருபடி அரிசிதான் வாரந்தோறும் விநியோகிக்கப்படும். இலங்கைக்கு 1947ல் ஒதுக்கப்பட்ட அரிசி 50 அல்லது 60 விகிதமாகக் குறைக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

## பெரிய நெசவுத் தொழிற்சாலை

அரசாங்கத்தின் பொறுப்பிலே, இலங்கையில் ஓர் பெரிய நெசவுத் தொழிற்சாலையை ஸ்தாபிக்க கைத்தொழில் வர்த்தக நிருவாகசபையார் நிச்சயித் திருப்பதாகத் தெரிகிறது. இத்தொழிற்சாலையில் ஆண்டுதோறும் 3 கோடி யார் புடைவை ஆக்கப்படும், யுத்தகாலத்துக்குமுன் இலங்கைக்குத் தேவையானது 6 கோடி யார் புடைவை மாத்திரமே இத் தொழிற்சாலைக்கு 45 லட்சம் பவுண் செலவு பிடிக்கும் ஆரம்பத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாவில் ஓர் தொழிற்சாலை நிறுவப்படும். இதில் ஆக்கப்படும் துணிகள் இலங்கையின் 10இல் ஒருபங்கினர் தேவையைப் பூர்த்தியாக்குமாம்.

—

## ஜனுப் அஸப் அலி

இந்திய இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரஸ் மந்திரியாக இருந்தவரும், இப்போது அமெரிக்காவில் இந்தியாவின் இராஜரீகத் தூதராக நியமிக்கப்பட்டிருப்பவருமான ஜனுப் அஸாப்அலி சென்ற வியாழக்கிழமை அமெரிக்காவுக்குப் பிரயாணமானார்.

—

## புதிய சுப்பிறீம்கோட்டுநீதிபதி

இப்போது அற்றோணி ஜெனரலாகவுள்ள ஸ்ரீ ஸி. நாகலிங்கம் சுப்பிறீம்கோட்டு நீதியரசராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

—

## தேகவியோகம்

—

### கணபதிப்பிள்ளை-செல்லப்பா

பண்ணாகம் தெற்கு வாசரும், பிரபல வியாபாரியும் திருவாளர் கிருஷ்ணர் குவாலாலம்பூர் பொக்கிஷக் கந்தோர், சின்னத்துரைகணபதிப்பிள்ளை சிறம்பான் நகர்காவல் கந்தோர், ஸ்ரீநிவாசன் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை, என்பவரின் தந்தையுமாகிய திரு க செல்லப்பா அவர்கள் 27-1-47 திங்கட்கிழமை காலை 6 30 மணியளவில் இறைவனது பாத கமலங்களைச் சரணடைந்தனர்; இவரது ஆன்மா சாந்தியடைவதாக. கடித.

●

### ஞானகுகதாச சர்மா

காரைநகர் தங்கோடை வாசரான (ஆனைக்குட்டிஐயர்)எனவழங்கும் பிரமஸ்ரீ கணபதி ஐயரின் பௌத்திரரும், மேற்படியூர் பண்டிதர் மு. சபாரத்தின ஐயரவர்களின் மருகருமாகிய ஞானகுகதாச சர்மா தமக்குண்டான சுரநோய் காரணமாக தைமீ 21-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் தேகவியோகமாயினர். இவரையிழந்து தியருறும் மனைவிமக்களுடன் யாமும்அநுதாபமுறுகின்றேம் இவர் ஆன்மா சாந்தியடைவதாக. —கடித.

மேற்படி சர்மா அவர்களின் அபரக்கிரியையின்போது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும். —மனேஜர்

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)



## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



விளம்பரமின்றேல்
பெரும் பணமில்லை


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் பிப்ரவரி 12

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 திருவிழிமிழலை என் சுப்ரமணியபிள்ளை வயலின் 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: திருவிழிமிழலை என்சுப்ரமணியபிள்ளை வயலின் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ராணுவத்திலிருந்து திரும்புவோருக்கு வசதிகள் 7-15 வானொலி வாத்யகோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 8 செம்மை வைத்தியநாத பாகவதர் 8-15 மதராசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குழல் இசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் பிப்ரவரி 13

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஏ சியாமளா வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 ஆர் குருமூர்த்தி பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ சியாமளா வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 ஏ சியாமளா வீணை 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5: கும்பகோணம் ஆர் தங்கவேலு பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டி 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 திருநெல்வேலி ஜி சங்கரகோபாலன்புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆலயிசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கும்பகோணம் ஆர் தங்கவேலு பாட்டு 10-30 முடிவு.

### வெள்ளி பிப்ரவரி 14

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ கங்கா பாகீரதி யமுனாபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கங்கா பாகீரதி. யமுனாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் கங்கா பாகீரதி, யமுனாபாய் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை: 5 சாத்திரிகணேசன் பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 குழிக்கரை எஸ் பிச்சைப்பிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 விவாத பிரச்னைகள் 8 சாவித்திரி கணேசன் பாட்டு 8-30 குழிக்கரை எஸ் பிச்சைப்பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஆங்கிலப்பேச்சு 10-05 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

### சனி பிப்ரவரி 15

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே வி சுந்தரம்ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8-15 என் சீதலக்ஷ்மி பாட்டு 8-30 காலை இசை 9 முடிவு.

1 கே சுந்தரம் ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2-05 ஆங்கிலப் பேச்சு 2-15 வி எஸ் கிருஷ்ணமூர்த்தி செட்டியார் பாட்டு 2-45 முடிவு.

மாலை: 5 வி எஸ் கிருஷ்ணமூர்த்தி செட்டியார் பாட்டு 5-40 அராட்டா திருவனந்தபுரம் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 எஸ் சீதாலக்ஷ்மி பாட்டு 7-15 தோட்டக்கலை 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராசிலுள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி மி ராமகிருஷ்ணன் பாட்டு 10 இசைவேள்ளை 10-30 முடிவு.

## இயற்கையில் இறைவன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7 நிஷ்டை கூடுதல். இது மன அமைதிக்கும் உயிர்க்குணம் மாறுவதற்கும் மிக்க அவசியமாகும்.

இது யார்க்கும் எளிது. காட்டுக்குப் போகவேண்டாம். கடும்பசி ஆற்றவேண்டாம், வீட்டிலிருந்தே இயற்கையோடியைந்த எளிய வாழ்வை நடாத்தி, இறைவனருளைப் பெறுதற்கு இது சிறந்ததொரு நெறியாகும். இது யார்க்கும் பொது. எத்தெய்வமெனினும் அத்தெய்வத்தினிடம் உறுதியான பக்தி வேண்டும்.

எனவே, எங்கணும் பரந்து விளங்கும் இயற்கையிலுறையும் இறைவனை இயற்கையோடியைந்த வாழ்க்கையில் ஈடுபட்டு, உணர்ந்து அவனினருளைப் பெற்றுய்ய முயல்வோமாக.

—சித்தாந்தம்


## India Super Tyres and Tubes
## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந் திகதி யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால்
தேவையானதற்கு இப்பொழுதே உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47



## NEW IRON SAFES FOR SALE
## புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-46—12-3-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, February, 11, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org